திரு. கி. ஜெயராமன்: தலைவரவர்களே, மாவட்டத் தலை நகரங்களிலுள்ள மருத்துவமனைகளில் சிறப்புப் பட்டங்களை அல்லது டிப்ளமா பெற்றவர்கள் பல பேர்களை, அனுபவம் பெற்றவர்களைத் தவறாமல் நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மிகச் சிறப்பு வாய்ந்த தகுதிகளுடைய மருத்துவ நிபுணர்கள் அதற்கேற்ற எல்லா வசதிகளுடைய மருத்துவ மனைகளிலே யிருந்தால்தான் அவர்களது அறிவும் திறனும் மக்களுக்குப் பயன்படும். specialists in certain departments என்று சிறப்பிக்கப்படுகிற அப்படிப்பட்ட தகுதியுடையவர்களை அரசாங்கம் அதற்கான முழு வசதிகள் இல்லாத மாவட்ட மருத்துவ மனைகளுக்கு அனுப்புவது ஏற்ற செயல் அல்ல. ஆனால் அதே நேரத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் Post-graduate degree பெற்றவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வருகிறார்களோ அந்த அளவில் மாவட்ட மருத்துவ மனைகளில் இடம்பெறச் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAN: If such medical officers are transferred because of their efficiency and seniority to mofussil hosptials, will it not result in suffering and inefficiency in city hospitals?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வியினுடைய உட்பொருள் அவ்வளவு பொருத்தமானது அல்ல. யார் யார் எந்தெந்த இடத்திலே மக்களுக்கு நன்மைகளை வழங்குகிறார்களோ, அந்த நன்மைகள் வளரும் அடிப்படையிலே வைத்து அந்தந்த இடத்திலே அமைக்கப்படுகிறார்கள். எப்பொழுது மிகுதியாகத் தேர்வு பெற்றவர்கள் கிடைக்கிறார்களோ, அப்பொழுது பரவலாகப் பயன்படுத்தப்படுவார்கள்.

Children's Care Homes in rural areas

* 476 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(a) whether there is any proposal to start Children's Care Homes in rural areas of the State; and

(b) if so, when the proposal will be given effect to?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY: In the rural areas there is great necessity to open Children Care Homes. The answer given by the Hon. Minister is that there are no such proposals to open Children Care Homes in rural areas. May I know from the Hon. Minister whether this Government will consider sympathetically and open at least a few Children Care Homes in rural areas?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சில்ட்ரன் கேர் ஹோம்ஸ் வேறு, ஆர்பனேஜஸ், ஹோம் ஃபார் டெஸ்ட்டிடியூட்ஸ் என்பது வேறு. கேர் ஹோம் என்ற அடிப்படையில் இப்பொழுது டைரக்டர் ஆப்

அப்ரூவ்ட் ஸ்கூல்ஸ் தலைமையின்கீழ் இரண்டு விடுதிகள் இருக்கின்றன. குற்றம் செய்கிற இளம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட பிறகு இங்கே அவர்களுக்கு சில நல்ல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சி காலம் முடிவதற்குள்ளாக தண்டனைக் காலம் முடிந்துவிட்டால் ஆஃப்டர் கேர் ஹோமில் அரசாங்கத்தின் சார்பில் விடப்படுகிறது. தனியாக அனாதைக் குழந்தைகளுக்கென்ற முறையில் அத்தகைய இல்லங்கள் அரசாங்கத்தின் சார்பில் இல்லை. அப்படி பல தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள். அவற்றுக்கு அரசாங்கத்தால் மானியம் கொடுக்கப்படுகிறது. அரசாங்கத்தின் சார்பில் அத்தகைய இல்லங்கள் தோற்றுவிக்கும் திட்டம் தற்போது இல்லை யென்று சொன்னேன்.

Training in Typewriting to Scheduled Caste students

* 477 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(a) whether the Government have any proposal to introduce a scheme for giving training to Scheduled Caste and Schedulel Tribes students in Typewriting and Scheduled during 1970–72; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ), தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியஅற்றில் அரிசன, பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் 1971-72-ல் கொண்டு வரப்பட்டுள்ளது. இத் திட்டம் பற்றிய விவரங்கள் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளன.

DR. H. V. HANDE: While I am thankful for the Hon. Minister for giving a detailed report, may I know the number of persons who actually availed of this opportunity during 1970–71?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 1970-71-ம் ஆண்டில் மாணவர்கள் யாரும் சேர்க்கப்படவில்லை. 1971-72-ல் தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். திட்டங்களை உருவாக்குவதற்குத்தான் கடந்த ஆண்டு பரிசிலனை செய்யப்பட்டது. தட்டச்சு 250 பேரும், சுருக்கெழுத்து 125 பேரும் சேர்க்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 478 முதல் 484 வரை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, தள்ளி வைக்கப்படுகின்றன.

George Town Co-operative Bank

* 485 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(a) whether it is a fact that the Management of the George Town Co-operative Bank has been declaring bonus on recurring deposit accumulations in violation of Rule 46 (4) of the Madras Co-operative Societies Rules, 1963;

@ ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.